# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES D.W.1
# OS.NO.113/2019

**Name** : Mohanarangan
**Father/Husband Name** : Govindasamy
**Age** : 70

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.04.2026**

**இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

விசாரணை தொடங்கிய நேரம் : 02.35 P.M

குறுக்கு விசாரணை

வாதியும் நானும் சகோதரர்கள். 09.03.1953 தேதியிட்ட ஆவண எண்.814/1953 ம், ஆவண எண்.89/1959 ம், மற்றும் ஆவண எண்.3052/1975 ல் கண்ட சொத்தும் என் மூதாதையர் சொத்துகள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 1 தம்பி 1 தங்கச்சி. 89/1959 ஆவண சொத்தானது பதிவு செய்யப்படாத அக்குவிடுதலை பத்திரம் என்றால் சரிதான். 22.01.1959 ல் என் சித்தப்பா, என் அப்பா கோவிந்தசாமிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் சரிதான்.தான செட்ல்மெண்ட்டா அக்குவிடுதலை பத்திரமா என்றால் தெரியாது, ஆனால் அளவோடு தெரியும் என்று சாட்சி சொல்கிறார்.

வாதி தாக்கல் செய்துள்ள முதலாவது ஆவணத்தில் 814/1953 என்ற ஆவண சொத்தானது அடமானமாக கோவிந்தசாமிக்கு வந்தது என்றாலும் அதை என் அப்பா வாய்மொழியாக என் தம்பி ஊனமுற்றவர் என்ற முறையில் வாதிக்கு வாய் மொழியாக ஒதுக்கி தற்போது அனுபவித்து வருகிறார் என்றால் தவறு, அவ்வாறு ஒதுக்கவில்லை.

பூர்வீக சொத்தில் சொல்லியுள்ள பண்ணை வீடு என் அப்பா வங்கியில் லோன் போட்டு கட்டப்பட்டது என்றாலும் அது மூவரும் பாத்தியப்பட்டது

என்றாலும் சரிதான். மின் இணைப்பு சர்வீஸ் எண். 33 என் அப்பா கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர் பெயரில் தான் இன்று வரை வருகிறது என்றாலும் சரிதான். பூர்வீக சொத்தில் உள்ள கிணறு 3 பேரும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் தாக்கல் செய்துள்ள பதில் மனு இதுதானா என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் நான் போட்ட பதில் தான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் நாங்கள் நீதிமன்ற கட்டணம் கட்டி எதிர் பாத்தியம் கேட்டுள்ளேனா என்றால் என் அப்பா ஏற்கனவே எனக்கு கொடுத்துள்ளதால் நான் கேட்கவில்லை. அதற்குண்டான நீதிமன்ற கட்டணத்தை நான் கட்ட தயாராக இருக்கிறேன்.

நான் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் சரியான பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறானது என்றாலும் சரியல்ல. என் அப்பா எனக்கு கொடுத்தார் என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் யாருக்குமே ஆவணமாக கொடுக்கவில்லை. நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

ஆவண எண்.410/1995 எனக்கு பாத்தியப்பட்டது என்றாலும் ஆவண எண்.409/1995 வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல, நான் தான் கிரயம் வாங்கி இரண்டு பேர் பெயரிலும் கிரயம் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் : 02.50 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2026.04.27 18:22:50 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.